DT Next
Dated: 06.07.2024

# Govt announces public holiday on July 10 in bypoll-bound Vikravandi

**CHENNAI:** The state government has declared a public holiday on July 10 for Vikravandi Assembly constituency, where the by-election is scheduled to be held on Wednesday. According to the order issued by Chief Secretary Shiv Das Meena, the Election Commission has notified July 10 as the poll day for the by-election to Tamil Nadu Legislative Assembly from Vikravandi Assembly Constituency, Villupuram district. Hence, the poll day (July 10, Wednesday) has to be declared as a public holiday under Section 25 of the Negotiable Instruments Act, 1881. "The public holiday will be for the areas comprising the Vikravandi Assembly constituency. All employees working in Villupuram district and neighbouring districts, but registered as voters in Vikravandi Assembly Constituency, shall also be given a paid holiday on July 10," he said. Further, the Chief Secretary said that all government offices, including industrial establishments of the government and government controlled bodies and all the educational institutions throughout the areas comprising Vikravandi Assembly Constituency will remain closed on July 10.

The Hindu (Tamil)
Dated: 06.07.2024

# விக்கிரவாண்டியில் வெளிநபர்களுக்கு ஜூலை 8 முதல் தடை

● சென்னை

விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதியில் இருந்து வெளி நபர்கள் 8-ம் தேதி தேதி மாலை 6 மணிக்கு மேல் வெளியேற வேண்டும் என்று தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

விக்கிரவாண்டி சட்டப் பேரவை தொகுதி இடைத்தேர் தல் வாக்குப்பதிவு ஜூலை 10-ம் தேதி நடைபெற உள்ளது. பிரச்சாரம் 8-ம் தேதி மாலை யுடன்நிறைவடைகிறது. அன்று மாலை 6 மணி முதல் வாக்குப் பதிவு முடியும் வரை தேர்தல் தொடர்பான பொதுக்கூட்டம், ஊர்வலத்தை, யாரும் ஒருங்கி ணைக்கவோ, நடத்தவோ, அதில் பங்கேற்கவோ கூடாது.

தேர்தல் விவகாரங்களை திரைப்படம், தொலைக்காட்சி, பண்பலை வானொலி, வாட்ஸ் அப், முகநூல் மற்றும் வலை தளங்கள் வழியாக மக்கள் பார்வைக்கு வைக்கக் கூடாது.

இந்த விதிகளை மீறினால் 2 ஆண்டு சிறை அல்லது அபராதம் அல்லது இந்த இரண் டும் சேர்த்து விதிக்கப்படும்.

தொகுதிக்கு தொடர்பு இல்லாத அரசியல் கட்சியினர் உள்ளிட்ட அனைவரும் 8-ம் தேதி மாலை 6 மணிக்கு மேல் தொகுதியை விட்டு வெளியேற வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

விக்கிரவாண்டி தொகுதிக் குள் இருக்கும் அரசு, பொதுத் துறை, தனியார் நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், தொழிற் சாலைகளுக்கு ஜூலை 10-ம் தேதி பொது விடுமுறை அறி வித்து அரசு உத்தரவிட்டது.

CEO, TN has instructed that outsiders should leave Vikravandi assembly constituency after 6 pm of July 8th

Daily Thanthi

Dated: 06.07.2024

### இந்திய தேர்தல் கமிஷனிடம்

# நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளர்களின் செலவு விவரங்கள் 19-ந் தேதி தாக்கல்

சென்னை, ஜூலை.6-

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் செலவு கணக்கு விவரங்கள் அனைத்தும் இந்திய தேர்தல் கமிஷனிடம் 19-ந்தேதிக்குள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

## 3 கட்டங்களாக...

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு கடந்த ஏப்ரல் 19-ந் தேதி நடந்தது. தேர்தலில் பதிவான வாக்குகள் கடந்த ஜூன் 4-ந் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இந்தத் தேர்தலில் 950 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அவர்களில் 609 பேர் சுயேச்சைவேட்பாளர்களாகும்.

நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தலுக்காக அதிகபட்சம் ரூ.95 லட்சம் வரை செலவழிக்கலாம். அந்த செலவு கணக்கு விவரங்களை 3 கட்டங்களாக வேட்பாளர் தாக்கல் செய்ய வேண்டும். வேட்பாளராக தேர்வான பிறகு ஓரிரு வாரத்தில் முதல்கட்ட கணக்கு விவரத்தையும், பின்னர் சில நாட்களில் 2-வது கணக்கு விவரத்தையும் தாக்கல் செய்ய வேண்டும். இறுதியாக, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட தேதியில் இருந்து 30 நாட்களுக்குள் தேர்தல் செலவு விவரங்களை வேட்பாளர்கள் தாக்கல் செய்ய வேண்டும்.

## கால அவகாசம் முடிந்தது

அதன்படி, தேர்தல் முடிவுகள் வெளியான ஜூன் 4-ந் தேதியில் இருந்து 30 நாட்கள் கடந்துள்ள நிலையில் இம்மாதம் 4-ந் தேதிக்குள் செலவு கணக்கு விவரங்களை அனைத்து வேட்பாளர்களும் தாக்கல் செய்திருக்கவேண்டும். அதன்படி, கடந்த வியாழக்கிழமையுடன் அதற்கான கால அவகாசம் நிறைவடைந்துவிட்டது.

தாக்கல் செய்யப்பட்டுள்ள தேர்தல் செலவு விவரங்கள் அனைத்தும் தற்போது அந்தந்த மாவட்டத்தேர்தல் அதிகாரியிடம் இருக்கின்றன. அவற்றை தேர்தல் கமிஷனின் பார்வையாளர் துணையுடன் மாவட்டத் தேர்தல் அதிகாரி ஆய்வு செய்து வருகிறார்.

## போட்டியிட தடை

ஆய்விற்குப் பிறகு ஆய்வறிக்கை தயாரிக்கப்படும். அந்த ஆய்வறிக்கை வரும் 11-ந் தேதிக்குள் மாநிலத் தலைமைதேர்தல் அதிகாரியின் அலுவலகத்துக்கு மாவட்டத் தேர்தல் அதிகாரி அனுப்பி வைப்பார். இந்த ஆய்வறிக்கை தலைமை தேர்தல் அதிகாரி ஆய்வுக்கு உட்படுத்துவார்.

பின்னர் அந்த அறிக்கை இந்திய தேர்தல் கமிஷனுக்கு வரும் 19-ந் தேதிக்குள் அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர், தேர்தல் செலவு கணக்கு விவரங்களை தாக்கல் செய்யாத வேட்பாளர்கள் யார்? யார்? என்பது கண்டறியப்படும். அவர்களுக்கு குறிப்பிட்ட சில ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட தடை விதித்துதேர்தல் கமிஷன் உத்தரவு பிறப்பிக்கும்.

The details of expenditure accounts of the Candidates who contested in the parliamentary elections in Tamilnadu are to be Submitted to the ECI by 19 of July.